முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1176

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.12.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா வாழ்க
ஓங்காரக்குடில் படைத்த தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் அரங்கனுக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 03 ம் நாள் 18.12.2022, ஞாயிற்றுக்கிழமை)
2. ஆசிதந்து உலகமக்களை எல்லாம்
ஆற்றல்பட ஞானவான்களாக்க
வாசிவெல்லும் மகா சூட்சுமத்தை
வள்ளல்தன்மை கொண்டு அற்புதங்களை
3. அற்புதங்களை அரங்கன் நீ
அறமாக உலகோர்க்கு ஆற்றல்பட தந்து
அகிலத்தையே மாற்றம் செய்யும்
மகா சக்தியாக இயங்கிவர
4. வருகவே அரங்கன் உமக்கு வல்லமை கூட்டி
வடிவேலன் யான் நித்தம் நித்தம் சக்தி வழங்கி வருகின்றேன்
வருகவே அரங்கனின் சக்தி மூலம்
வையகம் ஞான லோகமாக மாறுவது உறுதி
5. உறுதி கொண்டு அரங்கனை உலகோர் ஏற்றால்
உலகத்தில் சடுதி ஞானஆட்சிக்காலம் உதயமாகும்
கருதிகருதி அரங்கன் புகழை எல்லாம் கலியுகத்தில் ஆங்காங்கே மக்கள் பரப்பி வர
வருகின்ற இந்த சூட்சும பலத்தின் மூலமே இந்த வையகம் பெருமாற்றம் கண்டு தேறநேரும்
6. நேர்மை கொண்டு அற்புதத்தை
நடத்தும் ஞான தேசிகனின் தொண்டர்களே இந்த பெருமாற்றத்தை
நிகழ்த்தி உலகில் ஞானவான்கள் தலைமையும்
ஞானிகள் ஆட்சியுமாக மாற்றம் தரக்கூடும்
7. கூடவே இந்த வித பெருமாற்றத்துக்கே
குருபரன் யான் அரங்கனோடு இணைந்து அற்புதம் நிகழ்த்தி வர
வருகின்ற காலம் அரங்கனுக்கு சாதகமாய்
வையகத்தில் பல்வேறு சூட்சுமங்கள் பெருமைபட நடந்தேறி
8. பேருலகமே அரங்கனால் அமைதி
பாதுகாப்பு அனைத்தும் கண்டு சிறக்க நேரும்
நேர்மைபட அரங்கனோடு நிலவுலகம் இணைய இணைய
நிகழ்த்திடுவேன் ஞானலோகமாற்றம் சடுதிகாணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–